செ.வெ.எண்:27 நாள்:13.10.2020

# தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் மக்காச்சோளப் பயிரில் படைப்புழுத்தாக்குதல் கட்டுப்பாட்டில் உள்ளது - வேளாண்மைத்துறை இயக்குநர் திரு.வ.தட்சணாமூர்த்தி, இஆப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், வேளாண்மைத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் வேளாண்மைத்துறை இயக்குநர் **திரு.வ.தட்சணாமூர்த்தி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (13.10.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில், சம்பா சாகுபடி திட்டம், மக்காச்சோள படைப்புழு தாக்குதல் தொடர்பான ஆய்வு, நுண்ணீர் பாசனத்திட்டம், கூட்டுப்பண்ணையதிட்டம், பிரதம மந்திரியின் பயிர் காப்பீடுத் திட்டம், நீடித்த நிலையான மானவாரி இயக்கம் போன்ற திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ1.19 இலட்சம் மதிப்பீட்டில் சுழற்கலப்பை மற்றும் விசைத்தெளிப்பான்களை விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை இயக்குநர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, திருமானூர் வட்டாரத்திற்குட்பட்ட அம்மாகுளத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மக்காச்சோள படைப்புழு மேலாண்மை செயல்விளக்க திடலையும், அரியலூர் வட்டாரத்திற்குட்பட்ட தாமரைக்குளத்தில் விதைப்பண்ணைத் திட்டத்தின்கீழ் பயிர் செய்யப்பட்ட எண்ணெய் வித்து பயிர் நிலக்கடலை விதைப்பண்ணைத் திடலையும் பார்வையிட்டு, தமிழக அரசு வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

**இந்நிகழ்வில், வேளாண்மைத்துறை இயக்குநர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் சராசரியாக 16,000 எக்டரில் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பு 2020-21ஆம் ஆண்டில் இதுவரை 16,668 எக்டரில் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1300 எக்டர் கூடுதலாக சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 2600 எக்டர் கூடுதலாக சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது மக்காச்சோள பயிர் 12,700 எக்டர் இளம் வளர்ச்சி நிலையிலும் 1750 எக்டர் பூ பூக்கும் பருவத்திலும் 658 எக்டர் கதிர் முற்றும் தருவாயிலும் உள்ளது. 1560 எக்டரில் மக்காச்சோள அறுவடை நிறைவடைந்துள்ளது.

மேலும், கடந்த ஆண்டு ஒட்டுமொத்த பரப்பில் ஒரே நேரத்தில் பூச்சிக்கொல்லி தெளித்ததன் மூலம் படைப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த முடிந்தது. தற்போது தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையின் மூலம் படைப்புழுவை கட்டுப்படுத்த 4700 எக்டரில் செயல் விளக்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, மக்காச்சோள பயிரை தாக்கக்கூடிய படைப்புழுவை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோடை உழவு, பேவேரியா விதை நேர்த்தி மற்றும் வேப்பம்புண்ணாக்கு கடைசி உழவின்போது இட்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் எமாமெக்டின் பென்சோயேட் / ஸ்பைனிடோரம் மற்றும் அசாடிராக்டின் பூச்சிக்கொல்லி தெளித்ததன் மூலம் 20 நாட்களுக்குள் படைப்புழுவை கட்டுக்குள் கொண்டு வர முடிந்தது. வேளாண்மை துறை அலுவலர்கள், வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்காணித்தல் மற்றும் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மூலம் வாரந்தோறும் கண்காணிக்கப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அரியலூர் மாவட்டத்தில் தற்சமயம் மக்காச்சோள பயிரில் இராணுவ படைப்புழு தாக்குதல் சிறந்த முறையில் மேலாண்மை செய்யப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தின் இயல்பான சம்பா சாகுபடி பரப்பு 20,000 ஹெக்டேர் ஆகும். சம்பா பருவத்திற்கு புள்ளம்பாடி கால்வாய் மற்றும் நந்தியாறு கால்வாய் வழியே 11,000 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மீதமுள்ள 9,000 ஹெக்டேர் பரப்பு ஆழ்துளை கிணறுகள், திறந்தவெளி கிணறுகள் மற்றும் பாசன ஏரி வழியே பாசன வசதி பெறுகின்றது.

நடப்பு சம்பா பருவத்திற்காக 185 மெ.டன் நீண்டகால நெல் விதைகளும், 118 மெ.டன் மத்திய கால நெல் விதைகளும் விதைப்பண்ணைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் 185 மெ.டன் நீண்ட கால நெல் விதைகளும், 81 மெ.டன் மத்திய கால நெல் விதைகளும் விவசாயிகளுக்கு இதுவரை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 37 மெ.டன் மத்திய கால நெல் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதற்கு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. உரங்களின் தேவை இருப்பை பொருத்தமட்டில் யூரியா உரம் அக்டோபர் மாத தேவை 3200 மெ.டன். இதில் 675 மெ.டன் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 611 மெ.டன்னும், தனியார் கடைகளில் 940 மெ.டன்னும் மொத்தம் 1551 மெ.டன் கையிருப்பில் உள்ளது.

மேலும், சம்பா பருவத்திற்கு 20,400 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதில் 2607 ஹெக்டேர் இதுவரை சாதனை அடையப் பெற்றுள்ளது. நாற்று விடும் பணிகள் அனைத்து வட்டாரங்களிலும் நடைபெற்று வருகிறது. தற்போது 464 எக்டர் நாற்றுகள் நடவுப்பணி மேற்கொள்வதற்கு தயார் நிலையில் உள்ளன. நடப்பு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் சம்பா பருவத்தில் 17,850 ஹெக்டேர் சாகுபடி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என வேளாண்மைத்துறை இயக்குநர் **திரு.வ.தட்சணாமூர்த்தி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

மேற்கண்ட நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், வேளாண்மை இணை இயக்குநர் இரா.பழனிசாமி, துணை இயக்குநர் (ம.தி.மா.தி) பழனிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சண்முகம், உதவி இயக்குநர்கள், வேளாண் அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**